சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு நீதிமன்ற அமைச்சுப் பணி – திரு.P.ராஜ்குமார், இளநிலை உதவியாளர் (தா/பெ. காலஞ்சென்ற திருமதி.T.கௌரி) என்பவர் கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக 13.02.2017 முற்பகல் பணி நியமனம் செய்யப்பட்டது –தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசாணைக்கு விலக்களித்தும் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவுகள் 20 (6) (b), 28 (2) ஆகியவற்றை தளர்த்தி – பணிவரன் முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

உள் (நீதிமன்றம்.5) துறை

அரசாணை (4டி) எண்: 57

நாள்: 15.11.2021
திருவள்ளுவர் ஆண்டு 2051
பிலவ, ஐப்பசி–29.
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்:18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ–1) துறை, நாள் 23.01.2020.
2. பதிவாளர் (மாவட்ட நீதித்துறை), உயர்நீதிமன்றம், சென்னை அவர்களின் கடிதம் ROC.எண்:85909/2017/C4, நாள் 19.09.2018 மற்றும் 18.12.2020.

*****

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பதிவாளர் (மாவட்ட நீதித்துறை), உயர்நீதிமன்றம், சென்னை அவர்களின் கடிதத்தில் தமிழ்நாடு முதலீட்டாளர்கள் பாதுகாப்பு சட்டம் 1977–ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள மதுரை சிறப்பு நீதிமன்றத்தில் முதுநிலை பெயிலிப்பாகப் பணிபுரிந்து, 19.05.2010 அன்று பணியிடையே மரணமடைந்த திருமதி.T.கௌரி என்பவரின் வாரிசுதாரரான அவரது மகன் திரு.P.ராஜ்குமார் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 23.12.2016 அன்று விண்ணப்பித்திருந்தார் எனவும், அதனடிப்படையில் தனியர் 13.02.2017 முற்பகல் முதல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார் எனவும், எனவே, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.P.ராஜ்குமார் என்பவரது பணியினை, இளநிலை உதவியாளர் பதவியில், அவரது பணி நியமன நாளான 13.02.2017 முற்பகல் முதல் வரன்முறை செய்து உரிய ஆணைகள் வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. பதிவாளர் (மாவட்ட நீதித்துறை), உயர்நீதிமன்றம், சென்னை அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்க முடிவு செய்துள்ளது. திரு.P.ராஜ்குமார் என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி அளித்த விண்ணப்பமானது அரசு பணியாளர் இறந்த

மூன்று ஆண்டுகள் கடந்து அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், திரு.P.ராஜ்குமார் என்பவருக்கு வழங்கப்பட்ட பணிநியமனம் அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1) துறை, நாள் 23.01.2020 மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 20 (6) (b), சட்டப்பிரிவு 28 (2) க்கு முரணானது என்பதால், தனியர் சார்பாக அவ்வரசாணைக்கு விலக்களித்தும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 58–ன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி மேற்காண் சட்டப் பிரிவுகளை தளர்வு செய்தும், திரு.P.ராஜ்குமார் என்பவரின் பணியை அவர் பணிநியமனம் செய்யப்பட்ட நாளான 13.02.2017 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன் முறைப்படுத்தப்படுவதால் தனியருக்கு வழங்கப்படவேண்டிய ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் இதரப்படிகள், நிலுவைத்தொகை ஏதேனுமிருப்பின் அவற்றை பெற விதிகளின்படி அவர் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை மனித வள மேலாண்மைத் துறை அ.சா.கு.எண்: 33042/ஜி2/2021, நாள் 26.10.2021 மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அ.சா.கு.எண்:18722/க்யூ1/2021–1, நாள் 28.10.2021 மூலம் இசைவளித்த பிறகு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே.பிரபாகர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

பதிவாளர் (மாவட்ட நீதித்துறை), உயர்நீதிமன்றம், சென்னை –104.
திரு.P.ராஜ்குமார், இளநிலை உதவியாளர்
(தா/பெ. காலஞ்சென்ற திருமதி.T.கௌரி)
[பதிவாளர் (மாவட்ட நீதித்துறை), உயர்நீதிமன்றம், சென்னை வழியாக]

நகல்

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

15/11/2021
பிரிவு அலுவலர்
15/11/2021